உ

# யா/விக்ரோறியாக் கல்லூரி
# J/VICTORIA COLLEGE
## 'ISURU' SCHOOL

# நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2009
# FOUNDER'S DAY & PRIZE GIVING - 2009

# அதிபர் அறிக்கை
# Principal's Report

CHIEF GUEST

**Professor N. Shanmugalingan** Ph. D.
(Vice Chancellor, University of Jaffna)

**Mrs. Gowri Shanmugalingan** B. Com, M.Phil
(Teacher, Vembadi Girls' High School)

SPECIAL GUEST

**Mr. T. Enkarasu**
(Divisional Education officer, Chankanai)

FOUNDER'S DAY ADDRESS

**Dr. S. Srisatkunarajah**
Senior Lecturer,
Department of Mathematics and statistics, University of Jaffna

*CHULIPURAM*
*2009-09-15*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

01. தாபகர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்தல்

02. மங்கல விளக்கேற்றல்

03. இறை வணக்கம்

04. வரவேற்பு நடனம்

05. Welcome Speech by:

**Miss S. Sivalenuka**
(Senior Prefect)

06. அதிபர் அறிக்கை

07. தாபகர் தின உரை

08. English Song

09. சிறப்பு விருந்தினர் உரை

10. பிரதம விருந்தினர் உரை

11. பரிசில் வழங்கல்

12. நன்றியுரை

**செல்வன். ஆ. செல்வச்சந்திரன்**
(சிரேஷ்ட மாணவ முதல்வன்)

13. கல்லூரிக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

எமது கல்லூரியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானையும், சரஸ்வதித் தாயையும் வணங்கிக் கொண்டு பரிசுத்தின அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைய பரிசுத்தின வைபவத்தை இனிதே சிறப்பிக்க வருகை தந்திருக்கும் எங்கள் கல்விச் சொத்தான யாழ்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்களே, அவர் தம் பாரியாரும், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஆசிரியருமான திருமதி. கௌரி சண்முகலிங்கன் அவர்களே, நிறுவுனர் நினைவுப் பேருரை நிகழ்ந்த வருகை தந்திருக்கும் யாழ் பல்கலைக்கழகத்தின் கணிதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. S. சிறீசற்குணராஜா அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது சங்கானைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் திரு. துரை எங்கரசு அவர்களே,

சகோதரப் பாடசாலைகளின் அதிபர்களே, பழைய மாணவர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, கல்லூரியின் பிரதி அதிபர் அவர்களே, பகுதித் தலைவர்களே, ஆசிரியப் பெருந்தகைகளே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது மாலை வணக்கங்கள்.

இந்நன்நாளிலே பல்வேறு பொறுப்புகளின் மத்தியிலும் தனது பொன்னான நேரத்தை அர்ப்பணித்து, எமது அழைப்பை ஏற்று இன்முகத்துடன் பிரசன்னமாகி விழாவினை மிளிரச் செய்து கொண்டிருக்கும் பிரதம விருந்தினர் பேராசியர், நாகலிங்கம் சண்முகலிங்கன் அவர்களைக் கல்லூரியின் சார்பில் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அறிவுக் களஞ்சியமான பேராசிரியர் அவர்கள் எங்கள் கல்விச் சொத்தான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது துணைவேந்தராவர். நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று நேர்த்தியாக அதனை நிர்வகித்து வருகின்றார். சமூகவியற் பேராசிரியரான அவரது துறைசார்ந்த புலமையும், அவருக்கே உரித்தான சமூக தொடர்பாடல் வல்லமையும், சமூக அக்கறையும் அவரின் சிறப்பான பணியின் அடிப்படைகளாகும்.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கிராமங்களில் ஒன்றான கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியரும், சமூக சேவையாளரும், கூட்டுறவாளருமான நாகலிங்கம் நகுலேஸ்வரி தம்பதிகளின் தவப்புதல்வராவர். தனது கிராமத்து ஞானோதய வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியையும், புகழ்பூத்த தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் உயர்தர வகுப்பு வரை கல்வியையும் பெற்றுத்தேறியவர். கல்லூரிக் காலத்திலேயே கல்விப்புலமையுடன், இயல், இசை, நாடகத்துறைகளில் சாதனைபடைத்துத் தங்கப்பதக்கங்களைத் தனதாக்கிக் கொண்டவர். இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கலைச்சாதனைகளின் வழியில் நாடறிந்த ஆக்க இசைக் கலைஞராக, இலக்கிய கர்த்தாவாக புகழ்பெற்றுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகிய இவர் தனது பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் சித்தியடைந்த பெருமைக்குரியவர். 'பிலிப்பைன்ஸ்' தேசத்து அற்றனேயோ டி மணிலா பல்கலைக் கழகத்தில் உயர்பட்ட ஆய்வுப் பயிற்சி பெற்றவர், உலகப் புகழ் பெற்ற மானுடவியல் பேராசிரியர் கணநாத் ஒபய சேகரா அவர்களின் வழிகாட்டலில் இவராற்றிய கலாநிதிப்பட்ட ஆய்வு, A. New Face of Durga எனும் தலைப்பில் டெல்லி கலிஸ்கர பிரகராலய வெளியீடாகி உலக கணிப்பினைப் பெற்றுள்ளது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் பண்பாடு, சமூக மாற்றம் தொடர்பாக 15ற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இந்தியா, யப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற தேசங்களில் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் அதிதி பேராசிரியராக கடைமையாற்றியுள்ளதோடு, பல சர்வதேச கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்ததுடன், வகுப்பறைக் கற்பித்தல் அனுபவங்களையும் பெற்றுக்கொண்டவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சமூகவியற்துறை வேர்விடக் காரணமானதுடன், இத்துறையின் ஸ்தாபகத் தலைவராகவும், முதற் பேராசிரியராகவும் விளங்கியவர்.

இவர் சமூகவியற் சமூகமென்ற பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் மூலம் பல சமூகப்பணிகளை வழிப்படுத்தி வருகின்றார். எமது அயற்கிராமமான காட்டுப்புலத்தில் அமைந்துள்ள ஆரம்ப பாடசாலையை மையமாகக் கொண்டு நலிவுற்ற கிராமத்துப் பிள்ளைகளின் கல்வி,வாழ்வுநிலை மேம்பாட்டிற்கு ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது இவரது ஆற்றலும், அனுபவமே எங்கள் சமூகத்தின் உயர்கல்வி விருத்திக்கும், சமூக மேம்பாட்டிறகும் பெரும்பயன் தருகின்றன. பாடசாலைகளில் ஊடக அறிவுக் கல்வியை அறிமுகப்படுத்தி சமூக மேம்பாட்டினை ஏற்படுத்து வதற்கான முயற்சிகளிலும் வெற்றி கண்டுள்ளார்.

மேன்மைக்குரிய துணைவேந்தர் அவர்கள் எங்கள் கல்லூரியின் நிறுவுனர் நினைவுநாள், பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதையிட்டு எமது கல்லூரிச் சமூகம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது.

திருமதி. கௌரி சண்முகலிங்கன் அவர்கள் யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் ஆசிரியர் ஆவர். நாடறிந்த கூட்டுறவாளரும், கூட்டுறவுப் பரிசோத கருமான சபாரத்தினம் தங்கம்மா தம்பதிகளின் புதல்வியான இவரின் தந்தையாரின் தாய்மண் சுழிபுரம் என்ற செய்தி எமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகமானிப் பட்டதாரியான இவரின் கற்பித்தற் திறமையினால் பல்கலைக்கழகம் கண்ட மாணவர்கள் பலர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் கல்வியியலில் உயர்பட்டச் சான்றிதழ் பெற்றவர். "இலங்கையில் கல்வியும்இன உறவும்" என்ற தலைப்பில்ஆய்வினை மேற்கொண்டு முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர்.

பேராசிரியரைப் போலவே இவரும் நிறைந்த கலையார்வமும், ஈடுபாடும் கொண்டவர். இசைத்துறையில் நிறைந்த பயில்வு பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. பேராசியரின் சமூகவியல் ஆய்வுகளிலும் துணையாக விளங்குபவர்.

அம்பிகை எனும் செல்வ மகளுக்குத் தாயான திருமதி. கௌிரி சண்முகலிங்கன் அவர்களின் கரங்களால் இன்று பரிசில் பெற இருக்கும் எமது மாணவர்கள் பாக்கியசாலிகளே.

நிறுவுனர் நினைவுப் பேருரை ஆற்ற வருகை தந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கணிதத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. S. சிறீசற்குணராஜா அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் புகழ்பூத்த மாணவராவர். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத் துறையில் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொண்டு முதல் வகுப்பில் சித்தியடைந்தவர். தனது கலாநிதிப் பட்டத்தை Edinburgh பல்கலைக் கழகமான Heriot – Watt இல் பெற்றுக்கொண்டார். கல்வியில் துறையில் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக கொழும்பு திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறியில் சிறப்புச் சித்தி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது துறைசார்ந்த புலமை காரணமாக பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளதோடு, புலமைப்பரிசில்களையும் பெற்றுக்கொண்டவர்.

இவர் கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் தேர்ச்சி பெற்றதன் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உதைப்பந்தாட்ட அணி, கிரிக்கெட் அணி ஆகியவற்றின் பயிற்றுனராகவும் நீண்டகாலம் செயற்பட்டு விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கும் பங்களிப்பு வழங்கியவராவர்.

கணிதத்துறைப் பேராசான் அவர்களையும் வருக, வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. துரை எங்கரசு அவர்கள் தனது கோட்டப் பாடசாலைகளின் தேவைகளை இனங்கண்டு நிறைவு செய்து வருகின்றார். எல்லோருடனும் அன்புடனும், பண்புடனும், புன்சிரிப்புடன் பழகும் இயல்புடையவர். இதனால் இவர் சகலரது நன்மதிப்பைப் பெற்றவராவர். இவரையும் வருக, வருகவென வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நன்நாளில் பெருமனதுடன் எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் அனைவரையும் வருக வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இசுறு' பாடசாலை The Secondary School of the Future

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் நடுத்தரமான மாணவர் எணிக்கையைக் கொண்ட ஒரு பாடசாலையைச் சகல வளங்களும் கொண்ட இடைநிலைப்பாடசாலையாக மாற்றியமைக்கும் திட்டமொன்றை மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் முன்வைத்துள்ளார். இப்பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு இருக்க முடியாது. அதன் அடிப்டையில் நாட்டில் 150 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு 'இசுறு' பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யும் திட்டம் உலக வங்கியின் அனுசரணையுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ் மாவட்டத்தில் எமது பாடசாலை உட்பட்டதாக 5 பாடசாலைகள் இத்திட்டத்தினுள் உள்வாங்கப் பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் இப்பாடசாலைகளைச் சகல வசதிகளும் கொண்ட பாடசாலைகளாக அபிவிருத்தி செய்து கிராமப்புறப் பாடசாலைகளிலிருந்தும் நகர்ப்புறப் பாடசாசாலைகளை நோக்கிய மாணவர்களின் படையெடுப்பைத் தடுத்து; அனைவருக்கும் கல்வி, கல்வியில் தரமான, பண்புரீதியான அபிவிருத்தி, வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல், கல்வியில் நல்லாட்சியினை ஏற்படுத்தல் என்பன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

'இசுறு' பாடசாலைகளை உன்னதமான பாடசாலைகளாக (School of Excellence) அபிவிருத்தி செய்வதற்கு அதன் பயனாளிகள் யாவரிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். தற்காலத்தில் உலகளாவிய ரீதியில் சகல துறைச் சிந்தனையாளர்களும் அபிவிருத்திக்கு மனச்சுவர் மாற்றங்களை (Paradigm Changes) எதிர்பார்க்கின்றனர்.

Stephen R Convey இன் கூற்றுப்படி, 'சிறிய மாற்றங்களை எதிர்பார்ப்பின் நடத்தையினை மாற்றுங்கள், பாரிய மாற்றங்களை எதிர்பார்ப்பின் மனச்சுவரினை மாற்றுங்கள்' என்பதாகும்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்காக 'இசுறு' பாடசாலை அதிபர்களுக்கு கொழும்பிலுள்ள தொலைக்கல்வி கற்றல் நிலையத்தில் (Distance Learning Centre) வதிவிடப்பயிற்சி அளிக்கப்பட்டுத் தற்காலப்படுத்தப்பட்டுள்ளனர். அடுத்து பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் வாண்மை விருத்திச் செயலமர்வுகள், மாணவர் களுக்கான ஆளுமை விருத்திச் செயலமர்வுகள், சமூகத்திற்கான விழிப்புணர்வுச் செயலமர்வுகள் என்பன கல்வியமைச்சின் புலமைசார் வள ஆளணியினர் மூலம் அதே பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

பாடசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளும் 35 மில்லியன் ரூபா செலவில் மாற்றியமைக்கப்படவுள்ளன. நாம் ஒவ்வொருவரும் எம்மில் மாற்றங்களை ஏற்படுத்தி எமது பாடசாலையை உன்னதமான பாடசாலையாக மாற்றியமைப்போமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஆசிரியர் ஆளணியினர்:***

எமது கல்லூரியில் தற்போது 58 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களுள் முதுமாணிப் பட்டதாரிகள் 03 பேரும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாப்பட்டதாரிகள் 26பேரும், பட்டதாரிகள் 10 பேரும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 19 பேரும் அடங்குவர்.

நிரந்தர ஆசிரியர்களுள் ஒருவர் நூலக ஆசிரியராகவும், மற்றொருவர் வழிகாட்டல் ஆலோசனைக்குரிய ஆசிரியராகவும் செயற்படுகின்றனர்.

***சேவையிலிருந்து ஓய்வு பெறுவோர்:***

திரு. T. குணத்திலகம் அவர்கள் தனது 34 வருட ஆசிரிய சேவையில் 22 வருடங்களை எமது கல்லூரியில் பயிற்றப்பட்ட தொழில்நுட்ப ஆசிரியராகக் கடமையாற்றினார். சித்திரபாட ஆசிரியர் இல்லாத போது அவ்வெற்றிடத்தை நிரப்பியவர். செல்லப்பா இல்லப் பொறுப்பாசிரியராகவும், சாரணிய பொறுப்பாசிரியர் ஆகவும் நீண்டகாலமாகச் செயற்பட்டார். ஆசிரியர் நலன்புரிக் கழகத்தில் பல்வேறு பதவிகளை சிறப்பாக வகித்து வந்தார். இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. A. பாலசுப்பிரமணியம் அவர்கள் கணித, விஞ்ஞான ஆசிரியர். இவர் வலிகாம வலயப் பாடசாலைகளில் முதன்முதலில் எமது கல்லூரியில் கணனி நெறி ஆரம்பிக்கப்பட்டமைக்கு, வளவாளராக செயற்பட்டமையே காரணமாகும். ஆசிரியர் நலன்புரிக் கழகத்தில் தலைவராக சிறப்பாகச் செயற்பட்டார். விளையாட்டுக் குழுவில் உறுப்பினராகச் செயற்பட்டு விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தார். இவரது ஓய்வுக்காலம் சிறப்பானதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

***இடமாற்றம் பெற்றுச் சென்றோர்:***

திருமதி. ராஜினி சேந்தன் அவர்கள் 2005 செப்ரம்பர் மாதத்தில் இருந்து திட்டமிடல் நிதி உதவியாளராகத் திறம்பட செயற்பட்டு நிர்வாக செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடன் பங்களிப்பு வழங்கி வந்தார். 2007 யூன் மாதத்தில் இருந்து ஆசிரிய நியமனம் பெற்று தமிழ், ஆங்கிலம். குடியுரிமைக் கல்வி ஆகிய பாடங்களை கற்பித்து தனது சுயவிருப்பின் பேரில் 2009 தை மாத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

திருமதி. சிவலோஜினி சிவகுமார் அவர்கள் 01-06-2003இல் கல்லூரியில் இணைந்து வணிகக் கல்விப் பாடத்தினை க. பொ. த. (சா/த) (உ/த) வகுப்புகளில் கற்பித்து மாணவர்கள் சிறந்த பெறுபேறு பெறுவதற்கு வழிகாட்டினார். அலுவலக வேலைகளை சிறப்பாக ஆற்றி கல்லூரி நிர்வாகத்திற்கு ஒத்தாசை புரிந்தார். விளையாட்டுக்குழு உறுப்பினராக இருந்து விளையாட்டுப் போட்டிகள் சிறப்புறும் வண்ணம் செயற்பட்டார். இவர்களது அர்ப்பணிப்புடன் கூடிய சேவைகளுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரியின் பழைய மாணவனான திரு. நடராசா சிவரூபன் அவர்கள் கடந்த எட்டு வருடகாலமாக விளையாட்டுத்துறை ஆசிரியராகவும், பயிற்றுனராகவும் மிகக்குறைந்த வேதனத்துடன் நிறைவான சேவையினை ஆற்றி வந்துள்ளார். அவரது அர்ப்பணிப்புடன் கூடிய சேவை மூலம் எமது மாணவர்கள் தேசியமட்டம் வரை தொடர்ந்து விளையாட்டுத் துறையில் சாதனை படைத்து வருகின்றனர் இவர் கிராம சேவையாளராக நியமனம் பெற்று சென்ற போதிலும் ஓய்வு நேரத்தை கல்லூரியின் விளையாட்டு தேவைகளுக்காக தொடர்ந்து அர்ப்பணித்து வருகிறார். இவர் கல்லூரி உருவாக்கிய அரிய சொத்து என கூறினால் மிகையாகாது. இவருக்கு கல்லூரியின் நன்றியறிதலையும், பாராட்டினையும் தெரிவிப்பதுடன் அவர் வாழ்கையில் பல்வேறு வழிகளிலும் உயர்வுபெற இறையாசி வேண்டி வாழ்த்து கின்றேன்.

### *புதிதாக இணைந்தோர்:*

செல்வி. S. மலைமகள் விஞ்ஞான டிப்ளோமா ஆங்கில மொழி மூலம், செல்வி. K. தாரணி விஞ்ஞானப்பட்டதாரி, திரு. W. மதிதரன் விஞ்ஞானப் பட்டதாரி, திரு. M. கஜீகரன் கலைப்பட்டதாரி (தற்காலிக இணைப்பு), செல்வி. V. புஸ்பராணி கலைப்பட்டதாரி (தற்காலிக இணைப்பு), திரு. K. திருக்குமரன் பயிற்றப்பட்ட ஆங்கிலம், திரு. F. G. ஜேம்ஸ் பஸ்ரியன் நூலக விஞ்ஞான டிப்ளோமா, திரு. S. சிவபாலசுந்தர் பயிற்றப்பட்ட உடற்கல்வி, செல்வி. B. கார்த்திகா கணித டிப்ளோமா ஆங்கில மொழி மூலம், ஆகியோர் எமது கல்லூரியுடன் புதிதாக இணைந்துள்ளனர். இவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என நம்புகிறேன்.

### *ஆசிரியர் வாண்மை விருத்தி:*

திரு. R.இராஜமுகுந்தன் அவர்கள் கல்வியியல்மானிக்கற்கை நெறியினையும், திருமதி. சு. பாலகுமார், திருமதி. K. நிதர்சன் ஆகியோர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியினையும் பயின்று கொண்டிருக்கின்றார்கள். கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்படும் ESDFP செயற்றிட்டத்தின் மூலம், இசுறு பாடசாலை ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**கல்வி சாரா அலுவலர்கள்**

| | |
|---|---|
| பாடசாலை பணிப்பாளர் | - 03 |
| ஆய்வுகூட உதவியாளர் | - 01 |
| சுகாதாரத் தொழிலாளி | - 01 |
| தோட்டத் தொழிலாளி | - 01 |
| கணனி உதவியாளர் | - 01 (தற்காலிகம்) |

**மாணவர் விபரம்**

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6 – 9 | 220 | 226 | 446 |
| 10 – 12 | 176 | 190 | 366 |
| 12 – 13 | 95 | 130 | 225 |
| | **491** | **546** | **1037** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதிதாக அனுமதி பெற்றோர்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 06 | 62 | 67 | 129 |
| 07 | 02 | - | 02 |
| 08 | 02 | - | 02 |
| 09 | 02 | - | 02 |
| 10 | 14 | 11 | 25 |
| 11 | - | - | - |
| 12 | 14 | 12 | 26 |
| 13 | - | - | - |
| | **96** | **79** | **186** |

### கா. பொ.த (சா/த) தேர்வு டிசம்பர் 2008 மிகச் சிறந்த பெறுபேறு

| | | |
|---|---|---|
| 01. | செல்வன். குலரட்ணராஜா லிங்கநேசன் | 8A, B |
| 02. | செல்வி. மாதுரி ஜீவமோகன் | 7A, B, S |
| 03. | செல்வி. கார்த்திகா மகேஸ்வரன் | 7A, 2C |
| 04. | செல்வன். கதிரவேல் செந்தூரன் | 5A, 3B, S |
| 05. | செல்வி. ஜெயவர்ணா தெய்வேந்திரராஜா | 4A, 3B, 2C |
| 06. | செல்வன். மகாதேவராசன் கஜரூபன் | 4A, 3B, C |
| 07. | செல்வி. அபிராமி இந்திரகுமாரன் | 4A, 2B, 3C |
| 08. | செல்வி. கார்த்திகா கணேசநாயகம் | 4A, 2B, 2C, S |
| 09. | செல்வன். அருணாசலம் கௌதமன் | 4A, 2C, 2S |
| 10. | செல்வி. சசிகலா முருகமூர்த்தி | 4A, B, C, 3S |

### க.பொ.த. (உ/த) தகுதி பெற்றோர்

| | |
|---|---|
| விஞ்ஞானப் பிரிவு | - 21 |
| வர்த்தகப் பிரிவு | - 04 |
| கலைப்பிரிவு | - 14 |
| | **- 39** |

### க.பொ.த (உ/த) தேர்வு ஆக்கஸ்ட் 2008 மிகச் சிறந்த பெறுபேறு

| பிரிவு | மாணவர் பெயர் | பெறுபேறு | மா.நிலை |
|---|---|---|---|
| பௌதிக விஞ்ஞானம் | - செல்வன் குலரட்ணராஜா கணரூபன் | 3A | 2 |
| உயிரியல் விஞ்ஞானம் | - செல்வி சௌதாமினி சூரியகுமாரன் | A, 2B | 27 |
| வர்த்தகம் | - செல்வன் கந்தசாமி சுதாகரன் | A, B, C | 125 |
| கலை | - செல்வன் சதாசிவம் விஜயகுமார் | 3A | 126 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த பெறுபேறுகள்

### கணிதப்பிரிவு:

| | | | |
|---|---|---|---|
| K. கணரூபன் | 3A | S. சரண்ராஜ் | 2B, C |
| V. கிரிதரன் | 2C, S | | |

### உயிரியல் பிரிவு:

| | | | |
|---|---|---|---|
| S. சௌதாமினி | A, 2B | K. தணீசன் | 3C |
| T. உதயகௌரி | 2C, S | R. T. டினுஷா | 2C, S |

### வர்த்தகப் பிரிவு:

| | | | |
|---|---|---|---|
| K. சுதாகரன் | A, B, C | T. சுரேக்கா | A, B, C |
| G. சுபோஜினி | A, 2C | | |

### கலைப் பிரிவு:

| | | | |
|---|---|---|---|
| S. விஜயகுமார் | 3A | S. சிவப்பிரியன் | 2A, B |
| S. சதீபா | 2A, B | S. துஸ்யந்தினி | 2A, C |
| S. வாசுகி | 2A, C | V. சுபரூபன் | A, 2B |
| B. துஸ்யா | A, 2B | R. லாஸ்கரன் | A, 2B |
| S. கௌசிகா | A, 2B | P. சுகிர்தா | A, 2B |
| V. விக்னேஸ்வரி | A, 2B | R. மந்தாகினி | A, 2B |
| A. நிரோசா | A, 2B | P. சுதர்சினி | A, 2B |
| T. மோகனதாஸ் | A, 2B | J. சுகந்தினி | A, 2B |
| J. சஞ்சீவன் | A, B, C | T. சிந்துஜா | A, B, C |
| K. பிரியதர்சினி | A, B, C | V. ரஞ்சினி | A, B, C |
| B. சிவதாஸ் | A, B, C | S. மோகனப்பிரியா | A, B, C |
| K. கார்த்திகேஜன் | A, B, C | V. கஜேந்தினி | A, B, S |
| K. நித்தியா | A, B, S | P. லிரோஜனா | A, B, S |
| N. சிவநளினி | A, B, S | N. கௌரி | B, C, S |

### பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர்

| | |
|---|---|
| பௌதிக விஞ்ஞானம் | - 01 |
| உயிரியல் விஞ்ஞானம் | - 08 |
| வர்த்தகம் | - 10 |
| கலை | - 62 |
| | **- 87** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் 2008 / 2009**

| | |
|---|---|
| 01. பொறியியல் | - செல்வன். குலரட்ணராஜா கணரூபன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்) |
| 02. மருத்துவம் | - செல்வி. சௌதாமினி சூரியகுமாரன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| 03. அளவையியல் விஞ்ஞானம் | - செல்வன். செல்வரட்ணம் சரண்ராஜ் (சப்ரகமுவா பல்கலைக்கழகம்) |
| 04. விவசாயம் | - செல்வன். கருணாநிதி தனீசன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| 05. சித்த மருத்துவம் | - செல்வி. டினூஷா றொபோட் தவநாயகம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| 06. கலை | - செல்வன். சதாசிவம் விஜயகுமார் (பேராதனைப் பல்கலைக்கழகம்) |
| 07. கலை | - செல்வி. சதீபா சாம்பசிவம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| 08. நாடகமும் அரங்கியலும் | - செல்வன். வைரவன் சுபரூபன் (கிழக்குப் பல்கலைக்கழகம்) |
| 09. சங்கீதம் | - செல்வி. ரஞ்சினி வைரவன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| 10. சங்கீதம் | - செல்வி. கௌரி நவரட்ணம் (கிழக்குப் பல்கலைக்கழகம்) |
| 11. கலை | - செல்வன். கணேசலிங்கம் கார்த்திகேயன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| 12. கலை | - செல்வன். சரவணமுத்து சிவப்பிரியன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சென்ற வருடம் பரிசளிப்பு விழாவிற்கு பின் பல்கலைக்கழக மேலதிக அனுமதி பெற்றோர் 2007 / 2008**

| | | |
|---|---|---|
| 1. | சித்த மருத்துவம் | - செல்வி. உதயகௌரி துரைசாமிஐயர் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| 2. | இந்து நாகரிகம் | - செல்வி. கோகிலவாணி சிவலோகசுந்தரம் (கிழக்குப் பல்கலைக்கழகம்) |
| 3. | மொழியியலும் மெய்யியலும் | - செல்வி. தனுஜா சிவஞானம் (கிழக்குப் பல்கலைக்கழகம்) |
| 4. | விலங்கு விஞ்ஞானம் | - செல்வி. வாசுகி நாகராசா (ஊவா வெல்லஸ பதுளை) |
| 5. | பிரயோக விஞ்ஞானம் | - செல்வன். இராசதுரை மனோகரன் (வவுனியா வளாகம்) |
| 6. | இந்து நாகரிகம் | - செல்வன். சிவநேசன் ஜெனார்த்தன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |

கா.பொ.த (சா/த), கா.பொ.த (உ/த) தேர்வுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கும் 2008/2009 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதி பெற்றோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்களை வழிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைக்கும் எனது பாராட்டுக்கள் உரியனவாகும்.

**ஆங்கில மொழி மூலக்கல்வி**

தரம் 6, 7, 8, 9, 10 ஆகிய வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், புவியல், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டில் க.பொ.த பரீட்சைக்கு மாணவர்கள் முதல் முதலாக ஆங்கில மொழி மூலம் தோற்றவுள்ளனர்.

**பரிகாரக் கற்பித்தல்**

எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் மெல்லக் கற்போருக்கான மாலை நேர வகுப்புகள் தரம் 6 – 10 மாணவர்களுக்கு நடைபெறு கின்றன. திரு. E. ரமணன், திரு. K. கணேசமூர்த்தி ஆகியோர் பங்களிப்பு வழங்கி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாட விதான செயற்பாடுகள்

## விளையாட்டுத்துறை

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 12-02-2009 இல் சிறப்பாக நடைபெற்றது. ஓய்வுபெற்ற உடற்கல்விப்பணிப்பாளர் திரு. திருமதி. மு. லோகநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. து. எங்கரசு அவர்களும், ஓய்வுபெற்ற பகுதித்தலைவர் திரு. ச. திருக்குமார் அவர்களும் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

## இல்லங்களின் நிலை

| | | |
|---|---|---|
| கனகரத்தினம் இல்லம் (சிவப்பு) | 1ஆம் இடம் | 551 புள்ளிகள் |
| விலோபி இல்லம் (மஞ்சள்) | 2ஆம் இடம் | 542 புள்ளிகள் |
| சிவபாதசுந்தரம் இல்லம் (நீலம்) | 3ஆம் இடம் | 520 புள்ளிகள் |
| செல்லப்பா இல்லம் (பச்சை) | 4ஆம் இடம் | 409 புள்ளிகள் |

## முதன்மை வீரர்கள்

| வயதுப் பிரிவு | ஆண் | பெண் |
|---|---|---|
| U 13 | கு. சஜீவன் | சி. டிலானி |
| | | பூ. புவித்தா |
| U 15 | சீ அருண்பிரசாத் | த. நிதுஜா |
| U 17 | இ. துவாரகன் | சி. ஜெயரஞ்சினி |
| | இ. சஞ்சீவன் | |
| U 19 | கு. ஜெயக்குமார் | த. பாதுஜா |
| | வை. பிரதீபன் | மா. தர்சினி |
| U 21 | சு. கருணாகரன் | சி. சர்மதி |

## கோட்ட மட்டம்

| | தனி நிகழ்ச்சி | குழு நிகழ்ச்சி (அஞ்சல்) |
|---|---|---|
| முதலாம் இடம் | 15 | 08 |
| இரண்டாம் இடம் | 31 | 02 |
| மூன்றாம் இடம் | 15 | 04 |

- முதன்மை வீரர் கோட்ட மட்டம் - செல்வன் K. ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டார்.
- சங்கானைக் கோட்ட மெய்வன்மைப் போட்டியில் எமது கல்லூரி தொடர்ந்து 5வது தடவையாக முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைப் போட்டி முடிவுகள் - 2009

| பெயர் | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|
| சி. சர்மதி | முப்பாய்தல் | 3rd | - |
| சி. ஜெயறஞ்சினி | முப்பாய்தல் | 2nd | - |
| த. நிதுஜா | நீளம் | 1st | - |
| | 100m தடைதாண்டல் | 1st | 1st |
| | உயரம் | 3rd | - |
| கிருத்திகா | குண்டு | 3rd | 1st |
| வை. பிரதீபன் | 200m | 3rd | - |
| | முப்பாய்ச்சல் | 3rd | - |
| கு. ஜெக்குமார் | 400m | 1st | 3rd |
| | 110m தடைதாண்டல் | 2nd | 2nd |
| | 400m தடைதாண்டல் | 2nd | 3rd |
| ச. டெயதாஸ் | 800m | 1st | - |
| க. கார்த்திகேஜன் | 100m | 2nd | - |
| கு. பாலகுமார் | 400m | 1st | 3rd |
| | 200m | 2nd | - |
| | **அஞ்சல் ஓட்டம்** | | |
| **வயதுப்பிரிவு** | | | |
| U 13 ஆண் | 4x100m | 2 | - |
| U 15 ஆண் | 4x100m | 3 | - |
| U 17 ஆண் | 4x100m | 2 | - |
| U 19 ஆண் | 4x100m | 1 | - |
| | 4x100m | 3 | 3 |
| U 21 ஆண் | 4x100m | 1 | 2 |
| | 4x100m | 2 | 2 |
| U 15 பெண் | 4x100m | 3 | - |
| U 19 பெண் | 4x100m | 3 | - |
| U 21 பெண் | 4x100m | 3 | - |

**மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகள் 2009 சாதனையாளர்கள்**

| மாணவர் பெயர் | நிகழ்ச்சி | மாகாணம் |
|---|---|---|
| கு. ஜெயக்குமார் | 110m தடைதாண்டல் | 2 |
| சி. ஜெயறஞ்சினி | முப்பாய்தல் | 1 |
| த. நிதுஜா | 110m தடை தாண்டல் | 1 |
| க. கார்த்திகேயன் | 4x100m<br>4x400m | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இ. சாந்தன் | 4x100m | 2 |
| அ. யசிந்தன் | 4x100<br>4x400 | 2 |
| கு. பாலகுமார் | 4x100m<br>4x400m | 2 |
| ச. தர்சன் | 4x100m<br>4x100m | 2 |
| ம. சஞ்சீபன் | 4x100m<br>4x400m | 2 |
| சு. கருணாகரன் | 4x400m | 2 |

இவ்வீர, வீரங்கனைகள் இம்மாதம் நடைபெறவுள்ள தேசியமட்ட போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

## மாற்று வலுவுள்ளோருக்கான மெய்வன்மைப் போட்டி - 2009

வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவினரால் நடாத்தப்பட்ட மாற்று வலுவுள்ளோருக்கான வலயமட்டப் மெய்வன்மைப் போட்டியில் முதன்மை வீரர்களாக பா. றஜிதா, ம. நிஷாந்தினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம் மாணவர்களுக்கான பொறுப்பாசிரியராக திருமதி. ப. குமரகுரு சிறப்பாக செயற்பட்டு வருகின்றார். முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம்.

| பெயர் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| பா. றஜிதா | 100m, தட்டெறிதல், ஈட்டி எறிதல் | 1 |
| ம. நிஷாந்தினி | நீளம், தட்டெறிதல், குண்டெறிதல் | 1 |
| | குண்டெறிதல் | 2 |
| தி. அனோஜன் | தட்டெறிதல் | 1 |
| | குண்டெறிதல் | 2 |
| ற. நிரோஜன் | நீளம் | 1 |
| | 100m, 200m | 2 |
| ர. துஸ்யந்தி | 100m, 200m | 2 |
| | தட்டெறிதல் | 3 |
| செ. ரவுளா | 100m, | 2 |
| | நீளம், 200m | 3 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவிளையாட்டுகளும், உள்ளக விளையாட்டுகளும்

| விளையாட்டுக்கள் | கோட்டம் | வலயம் |
|---|---|---|
| வலைப்பந்து U17 பெண்கள் | 3 | - |
| வலைப்பந்து U 19 பெண்கள் | 2 | - |
| கரப்பந்து U 17 பெண்கள் | 3 | - |
| கரப்பந்து U 19 பெண்கள் | 2 | - |
| கரப்பந்து U 19 ஆண்கள் | 3 | - |
| மென்பந்து துடுப்பாட்டம் U 19 ஆண்கள் | 1 | 2 |

★ **தோற்பந்துக் கிரிக்கெற்:-**

இவ்வாண்டு கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட தோற்பந்து கிரிக்கெற் அணி கீழ் வரும் பாடசாலைகளுடன் போட்டிகளில் பங்குபற்றியது.

1. யாழ்ப்பாணக் கல்லூரி
2. யாழ் மத்திய கல்லூரி
3. சென்ஜோன்ஸ் கல்லூரி (பரியோவான்)
4. சென் பற்றிக்ஸ் கல்லூரி (புனித பத்திரிசியார்)
5. யாழ் இந்துக்கல்லூரி
6. கொக்குவில் இந்துக்கல்லூரி

இவ் அணியின் பொறுப்பாசிரியராக திரு. ஆ. பிரபாகரனும் பயிற்றுனராக திரு. ந. சிவரூபனும் செயற்படுகின்றனர்.

கல்லூரியின் 13 வயதுக்குட்பட்ட தோற்பந்து கிரிக்கெற் அணி கீழ்வரும் பாடசாலைகளுடன் போட்டிகளில் பங்குபற்றியது.

1. புனித பத்திரிசியார் கல்லூரி
2. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
3. யாழ்ப்பாணக் கல்லூரி
4. யாழ் மத்திய கல்லூரி
5. மானிப்பாய் இந்துக் கல்லூரி

இவ் அணியின் பொறுப்பாசிரியராகவும் பயிற்றுனராகவும் திரு. வி. மதிதரன் அவர்கள் செயற்படுகின்றார்.

இவ் ஆண்டு இலங்கை கிரிக்கெற் சபையினால் கல்லூரியின் தோற்பந்து கிரிக்கெற்கென ஏறத்தாழ 700,000.00 ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இப்போட்டிகளுக்கான செலவுகளை எமது பழைய மாணவர் சங்கம் வழங்குகின்றது என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சதுரங்கம்:-

மகாஜனாக் கல்லூரியால் 2008இல் நடாத்தப்பட்ட நூற்றாண்டை நோக்கிய சதுரங்கப் போட்டியில் செல்வி. நா. நிறஞ்சனா, செல்வன் தே. துவாரகன் ஆகிய இருவரும் கோட்ட மட்டத்தில் சம்பின்களைப் பெற்றனர்.

2009இல் தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தால் யாழ் மாவட்ட பாடசாலைகளுக் கிடையில் நடாத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் கோட்டமட்டத்தில் பரிசு பெற்றோர்.
செல்வன். இ. சிவராம் செல்வன். சு. பகீரதன் செல்வி. த. நிதுஜா

## ★ சிறந்த விளையாட்டு வீரர்கள் (ஆண்கள்)

1. மென்பந்து கிறிகெற் - ஞா. கோவர்த்தனன்
2. தோற்பந்து கிறிக்கெற் - வ. கபில்சாந்
3. கரப்பந்து - த. முகுந்தன்
4. காற்பந்து - சி. நகுலேந்திரன்
5. சிறந்த மெய்வல்லுநர் வீரர் - க. கார்த்திகேயன்
6. சகலதுறை ஆட்டக்காரர் ஆண் - கு. ஜெயக்குமார்

## ★ சிறந்த விளையாட்டு வீரர்கள் பெண்கள்

1. சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனை - க. தாரணி
2. சிறந்த கரப்பந்தாட்ட வீராங்கனை - இ. பராசக்தி
3. சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனை - த. நிதுஜா
4. சகலதுறை ஆட்ட வீராங்கனை - சி. ஜெயறஞ்சினி

## ★ விளையாட்டுக்குழு:-

திரு. நா. திருக்குமரன், திரு. வி. சண்முகநாதன், திருமதி. அ. சற்குணசிங்கம், திரு. தி. சிவயோகலிங்கம், திரு. ம. ஞானசேகரன், திருமதி. இ. தவநாயகம், திருமதி. ப. குமரகுரு, திரு. இ. கைலைவாசகன், திரு. ஆ.பிரபாகரன், திருமதி. ல. தர்மதேவன், திருமதி. ஜெ. சுதர்சன், திரு. செ. சிவபாலசுந்தரர், செல்வி. த. லோகநாயகி, செல்வி. ந. ஜெயகௌரி இக் குழுவின் செயலாளராக திரு. நா. திருக்குமரன் செயற்படுகின்றார். மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கான பயிற்சிகளை விளையாட்டுக்குழு வழங்கி வருகின்றது. இக் குழுவின்சிறந்த பங்களிப்பிற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# மாணவர் மன்றங்கள்

## ★ இந்துமன்றம்

இம் மன்றம் எமது கல்லூரியில் அமைந்திருக்கும் சிவகாமி சமேத நடராஜர் ஆலயத்தில் தினசரி பூஜைகள், வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களின் வகுப்பு ரீதியான பூஜைகள், நாயன்மார் குருபூசைகள், ஆறு நடேசர் அபிஷேகங்கள், நவராத்திரி பூசைகள், மகாசிவராத்தி, வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிகைகள் ஆகிய சமய நிகழ்ச்சிகள் யாவற்றையும் நடாத்தி வருகின்றது. எமது பூசகர் சிவஸ்ரீ. K. சற்குணராஜசர்மா ஆவார்.

சிவபூமி முதியோர் இல்லத்தில் திருநாவுக்கரசுநாயனார் குருபூசை தினத்தில் கலை நிகழ்ச்சிகள் நடாத்துதல், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலத்தில் பஜனை நடாத்துல், சந்நிதியான் ஆச்சிரமத்தில் இசை நிகழ்ச்சிகள் வழங்கல் போன்ற பல்வேறு செயற்பாடுகளைக் கொண்டது.

இதன் தலைவராக செலவன். ஞா. கோவர்த்தன், செயலாளராக செல்வன். கு. தனேஸ், பொருளாளராக செல்வன் ச. தனானந் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

பொறுப்பாசிரியர்களாக திரு. இ. இராஜமுகுந்தன், திருமதி. ல. தர்மதேவன், திருமதி. கோ. தேவசுதன், திருமதி. பா. சுதர்சினி என்போர் பணியாற்றுகின்றனர்.

### ★ உயர்தர விஞ்ஞான மன்றம்:-

இம்மன்றம் க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சையை நோக்காக கொண்டு விஞ்ஞான பாடச் செய்முறைகளுக்கான பயிற்சிப் பட்டறையை நடத்தி வருகின்றது. அயற்பாடசாலைகளான யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம், யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர். வருடாந்த கணித விஞ்ஞான, பொதுஅறிவுப் போட்டியை மாணவருக்கு நடாத்தி அவர்களின் கணித விஞ்ஞான பொது அறிவினை விருத்தி செய்து வருகிறது. இம்மன்றத்தின் தலைவராக செல்வன். அ. அன்ரன் தனேஸ், செயலாளராக செல்வி. ம. விஜி, பொருளாளராக செல்வி. உ. சுகன்யா ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

### ★ வணிக மன்றம்:-

பாடசாலை மட்டத்தில் வணிகப் போட்டிகளை நடாத்தி தகுதியான மாணவர்களைத் தெரிவு செய்து கோட்ட, வலய மட்டப் போட்டிகளுக்குப் பயிற்று விப்பதனை இம்மன்றம் செயற்படுகின்றது. கூட்டுறவு சம்பந்தமான போட்டிகளிலும் மாணவர்களை பங்குபற்ற வழிப்படுத்தலையும் இம்மன்றம் மேற்கொள்கின்றது.

இம்மன்றத்தின் தலைவராக செல்வன். அ. செல்வச்சந்திரன், செயலாளராக செல்வன். து. விசுவராஜ், பொருளாளராக செல்வன். கு. நிரோஜன் என்போர் செயற்பட்டு வருகின்றனர். பொறுப்பாசிரியராக திருமதி. வ. கனகேந்திரன் செயற்பட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வணிகப் போட்டிகள் - 2008**

| தரம் | | மாணவர் பெயர் | கோட்டம் | வலயமட்டம் |
|---|---|---|---|---|
| 10 | முயற்சியாண்மைக்கல்வி புத்தாக்கம் | கோ. கோகுலப்பிரியா<br>தி. ரஜிக்கா | 1<br>1 | 1<br>- |
| 11 | முயற்சியாண்மைக்கல்வி எழுத்துப்பரீட்சை | கு. லிங்கநேசன் | 3 | - |
| 12 | வினாடிவினாப் போட்டி (குழு) | அ. அன்ரனிகிளாறன்ஸ்<br>து. விசுவராஜ்<br>இ. சலோஜன்<br>உ. சுகிர்தா<br>ப. நிஜந்தா | 1 | 1 |
| 13 | எழுத்துப் பரீட்சை | ஞா. போஜினி<br>த. சுரேக்கா | 1<br>2 | 1<br>- |

வட்டு மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கம் வட்டுக்கோட்டை பவள விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு சபையின் ஐக்கிய தீபம் மாதாந்தக் கூட்டுறவு பத்திரிகையை இலவசமாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**வெற்றி பெற்ற மாணவர் விபரம் - பேச்சுப்போட்டி**

| பிரிவு | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| கீழ்பிரிவு | த. நிதுஜா | 1ம் இடம் |
| | தே. காய்த்திரி | 2ம் இடம் |
| மத்திய பிரிவு | இ. அபிராமி | 3ம் இடம் |
| மேல்ப்பிரிவு | ப. நிஜந்தா | 2ம் இடம் |
| **கட்டுரைப் போட்டி** | | |
| கீழ்பிரிவு | தே. காயத்திரி | 1ம் இடம் |
| | த. நிதுஜா | 2ம் இடம் |
| மத்திய பிரிவு | ஸ்ரீ காருண்யா | 1ம் இடம் |
| மேல்பிரிவு | உ. சுகிர்தா | 1ம் இடம் |
| **பொது அறிவுப் போட்டி** | | |
| தே. துவாரகன் | | 1ம் இடம் |

★ **சமூக விஞ்ஞான மன்றம்:-**

இம் மன்றத்தினால் சமூக விஞ்ஞானப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வருடம் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றினை வெளியிடுவதற்கான ஏற்ப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இம் மன்றத்தின் தலைவராக செல்வன. S. நகுலேந்திரன், செயலாளராக செல்வி. K. சிந்துஜா, பொருளாளராக செல்வன். M. ஜெயப்பிரசாத் ஆகியோர் செய்றபடுகின்றர். பொறுப்பாசிரியராக திருமதி. A. கண்ணன் செயற்பட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **தகவல் தொழில்நுட்பக் கழகம்:-**

இக் கழகத்தின் தலைவராக செல்வன். A. ஜெகதீஸ்வரன், செயலாளராக செல்வன். இ. அசோக்கிருஸ்ணா, பொருளாளராக செல்வன். W. மதிதரன் (ஆசிரியர்) என்போர் செயற்பட்டு வருகின்றனர் மாகாணமட்ட மென்பொருள் ஆக்கப் போட்டியில் மாணவர்களும், ஆசிரியர்களும் பங்குபற்றுவதற்கு இக்கழகம் உதவி வருகின்றது. இம் மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி. T. தீபன் அவர்களும், ஏனைய கழக ஆசிரியர்களாக திரு. W. மதிதரன், திரு. கு. ஜேம்ஸ் பஸ்ரியன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

★ **ஆங்கில மன்றம்:-**

இம்மன்றம் 16-06-2009இல் ஆங்கில தினத்தை சிறப்பாக கொண்டாடியது. வலிகாம வலய RESC ஒருங்கிணைப்பாளர் திரு. S. மோகனகிருஷ்ணன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்தார். இம்மன்றமானது கோட்ட, மாவட்ட, மகாண மட்டப் போட்டிகளுக்கு மாணவர்களை பயிற்றுவித்து அவர்கள் வெற்றிபெற வழிவகுக்கிறது.

இதன் தலைவராக செல்வன். ச. சண்மதுரன், செயலாளராக செல்வி. ப. பிரதீபா, பொருளாளராக செல்வன். த. மதுகரன் ஆகியோர் செயற்படுகின்றனர். பொறுப்பாசிரியராக திருமதி. S. தேவராஜா அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

## English Competition – 2009

| Grade | Name | Event | Divisional Level | Zonal Level | District Level |
|---|---|---|---|---|---|
| 6 | G. Yasotha | Copy Writing | 1st | 1st | 2nd |
| | Y. Aingaran | Recitation | 3rd | | |
| | S. Mathusha<br>G. Yosotha | Creative Writing<br>Dectation | 2nd<br>2nd | | |
| 7 | S. Sivananthi | Recitation<br>Copy Writing | 2nd<br>3rd | 1st | |
| | C. Shamini | Dictation<br>Recitation | 3rd<br>3rd | | |
| | R. Karthigajini | Creative Writing | 2nd | | |
| | P. Aingaran | Creative Writing | 3rd | | |
| | G. Lavanya | Copy Writing | 3rd | | |
| 8 | S. Sugantham | Recitation | 3rd | | |
| | T. Tharani | Creative Writing | 3rd | | |
| 9 | T. Kayatiri | Creative Writing<br>Dictation | 1st<br>1st | 1st<br>2nd | <br>3rd |
| | T. Vijitha | Creative Writing<br>Dictation | 3rd<br>2nd | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | T. Tharshiga | Copy Writing | 1st | | |
| 10 | K. Karunya | Recitation | 2nd | | |
| | I. Karthiga | Dictation | 2nd | 2nd | |
| 11 | M. Mithula | Dictation | 2nd | | |
| | D. Pathujan | Dictation | 3rd | | |
| 12 | R. T. Sylvia | Copy Writing<br>Dictation | 1st<br>1st | 1st | 1st |
| | S. Howshiga | Oratory<br>Creative Writing | 2nd<br>3rd | 2nd | 2nd |
| | M. Karthiga | Dictation | 2nd | | |
| | S. Kasthuri | Impromtu | 3rd | | |
| 13 | M. Vijee | Copy Writing | 3nd | | |
| | P. Rathy | Creative Writing<br>Dictation | 2nd<br>2nd | | |
| | U. Sugarya | Creative Writing<br>Impromtu | 3rd<br>1st | | |
| | | Junior Drame | 3rd | | |
| | | Senior Drame | 1st | 2nd | |
| | | Senior Poetic Drama | 1st | 2nd | |

★ **விவசாய மன்றம்:-**

இம்மன்றம் பாடசாலைத் தோட்டம் அமைக்கும் போட்டியில் கோட்ட மட்டத்தில் பங்குபற்றியது. வீட்டுத்தோட்டம் அமைத்தல், நாற்றுச்சாடிகள், கன்றுகள் வளர்த்து சமூகத்திற்கு விநியோகித்தல், மூலிகைத்தோட்டம் அமைத்தல் என்பனவும் இதன் மூலம் செயற்படுத்தப்படுகிறது. வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தால் விவசாய விழிப்புணர்வுச் செயலமர்வு இம்மன்றமூடாக நடாத்தப்பட்டது.

இம்மன்றத்தின் தலைவராக செல்வன். T. வெங்கடேஸ்வரன், செயலாளராக செல்வி. M. அனிஸ்ரா, பொருளாளராக S. கஜன் செயற்பட்டு வருகின்றனர். இம்மன்ற பொறுப்பாசிரியராக திருமதி. C. N. சண்முகநாதன் அவர்கள் செயற்படுகின்றார்.

★ **நுண்கலை மன்றம்:-**

மாணவர்களின் கலைத்திறன் ஆர்வத்தை வளர்க்கும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. தமிழ்த்தினப் போட்டிகளில் மாவட்ட, மாகாண மட்டங்களில் மாணவர்களுக்கான செலவுகளை பொறுப்பேற்றல், வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கல் போன்ற செயற்பாடுகளை கொண்டது இம்மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

